ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2176/13 – 2020 මැයි මස 20 වැනි බදාදා – 2020.05.20

*2176/13 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : - தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

*14 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரின் ஒத்திசைவுடன், இக்கட்டளை மூலம், திருத்தப்பட்டவாறான, 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிய 2047/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள 2 ஆம் பந்தியின் உப பந்தி (xvii) இற்கு உடனடுத்து பின்வரும் உப பந்திகளை உட்சேர்ப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.*

"(xviii) *சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுதேச மருத்துவ சேவைகள், சுகாதார சேவைகள் திணைக்களம், இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான் படை, இலங்கைப் பொலிஸ் மற்றும் COVID மையம் (COVID - 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம்) என்பனவற்றின் கோரிக்கையின் பேரில், 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, முதலீட்டுச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்துள்ள ஏற்றுமதி சார்ந்த ஏதேனுமொரு நிறுவனத்தினால் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அவற்றினை ஒத்த பொருட்கள் வழங்கப்படுகையில் அல்லது நன்கொடையாக கையளிக்கப்படுகையில்,*

(xix) *நாட்டின் COVID - 19 தொற்றுநோயினை எதிர்கொண்டு சுகாதார சேவைகளை வழங்குவதற்கு தேவையான மருத்துவ, அறுவை சிகிச்சை மற்றும் பல் கருவிகள், இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் அதன் பாகங்கள், மருத்துவமனை/மருத்துவ தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் அதனை*

1A - PG5016 - 567 (2020/06)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

ஒத்த பொருட்களை, சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடன், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், இறக்குமதி செய்து அல்லது இறக்குமதி செய்து வழங்குகையில் அல்லது இறக்குமதி செய்து நன்கொடையாக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கையில், மேற்கூறியவற்றில் எந்தவொரு பகுதியளவு அனுப்புப் பொருள்/சரக்குகளுக்கு இது வழங்கப்படாது என்பதோடு, 2020, திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாத்திரம் இது பயன்வலுப்பெறுதல் வேண்டும்."

இக்கட்டளையானது, 2020, மே மாதம் 20 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

**பிரசன்ன ரணதுங்க,**
கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு,
கொழும்பு 01,
2020, மே 20.

07 - 123